040

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை

**EPU 5255 – ஆரம்பக் கற்பித்தலுக்கான விஞ்ஞானமும் சுற்றாடலும்**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.
இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **19/02/2023** நேரம்: மு.ப 09.30 – மு.ப 11.30

## பகுதி I

1. ஆரம்ப வகுப்பு பிள்ளைகளுக்கு விஞ்ஞானத்தினைக் கற்பிப்பதன் முக்கியத்துவத்தை **மூன்று** (3) உண்மைகளை வைத்து விளக்குக.

2. சுற்றுச் சூழலில் ஏற்றத் தாழ்வினை ஏற்படுத்தும் **இரு** (2) மனிதச் செயற்பாடுகளை விபரிக்குக.

3. விஞ்ஞான ரீதியான மனப்பாங்கின் **ஐந்து** (5) இயல்புகளைக் குறிப்பிடுக.

4. ஆரம்ப பாடசாலை மாணவரிடையே ஆராய்வூக்கத்தை தூண்டச் செய்வதற்கு ஆசிரியர் நடத்தக்கூடிய **இரண்டு** (02) செயற்பாடுகளை விளக்குக.

5. ஆரம்ப வகுப்பு பிள்ளைகளுக்கு எவ்வாறு உணவுச் சங்கிலி என்ற எண்ணக்கருவை விளக்குவீரென உதாரணத்துடன் விளக்குக.

6. ஆரம்ப வகுப்பு ஆசிரியர் பிள்ளைகளுக்கு சக்திக் காப்பினை விளக்குவதற்கு பயன்படுத்தக்கூடிய உதாரணங்கள் **மூன்று** (03) பற்றி கலந்துரையாடுக.

7. சூரிய சக்தியின் முக்கியத்துவத்தினைப் பற்றி ஆரம்ப பாடசாலை மாணவருக்கு விபரிப்பதற்கு ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) உதாரணங்களை விளக்குக.

8. "சுற்றுச் சூழலைப் பேணுவதற்கு பல்லுயிர்களைக் காப்பது முக்கியமானதாகும்." **மூன்று** (03) உதாரணங்களை முன்வைத்து இக் கூற்றினை நியாயப்படுத்துக.

**(5x8= 40 புள்ளிகள்)**

## பகுதி II

09.

i. நாளாந்த வாழ்வில் சக்தியை பாதுகாக்க வேண்டியதன் தேவையை **மூன்று** (03) காரணங்களை முன்வைத்து விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. நாளாந்த வாழ்வில் சக்தியை பாதுகாக்கும் வழிமுறைகளை ஆரம்ப வகுப்பு மாணவருக்கு கற்பிப்பதற்கு பொருத்தமான செயற்பாடொன்றை தயாரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. நீங்கள் மேலே எழுதிய செயற்பாட்டினை அமுல்ப்படுத்தும் போது நீங்கள் கையாளும் உபாயங்கள் **மூன்றினைக்** (03) கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

10.

i. ஆரம்ப வகுப்பு மாணவருக்கு நீர் வட்டத்தினைக் கற்பிக்க பொருத்தமான செயற்பாடொன்றினைத் தயாரிக்குக. பூமியில் நீரின் தோற்றம், அசைவு போன்றவற்றை எவ்வாறு விளக்குவீர்கள்.

(08 புள்ளிகள்)

ii. மனிதனின் செயற்பாடுகள் எவ்வாறு நீர் வட்டத்தினைப் பாதிக்கும் என்பதனைப் பிள்ளைகளுக்கு விளக்க நீங்கள் பயன்படுத்தப்போகும் **மூன்று** (03) உண்மைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் நீர் வட்டத்தினைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய **மூன்று** (03) நடவடிக்கைகளைப் பற்றி கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

11.

i. ‘ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே அவர்களின் சுற்றாடலிலுள்ள உயிருள்ளன, உயிரற்றன என்பவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பொருத்தமான கற்றல் செயற்பாடொன்றை திட்டமிடுக.
(கற்றல் செயற்பாட்டினை படிமுறை படிமுறையாக விளக்குக)

(08 புள்ளிகள்)

ii. மனிதர் பூமியில் உயிர் வாழ்வதற்கு பல்வகைத் தன்மையின் தாக்கத்தின் முக்கியத்துவத்தினை நீங்கள் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு எந்தெந்த **மூன்று** (03) உண்மைகளை முன்வைத்து விளக்குவீர்களென விபரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. சுற்றாடலிலுள்ள உயிருள்ளன, உயிரற்றன என்பவற்றை பாதுகாப்பதற்கு ஆரம்ப வகுப்பு மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் **மூன்றினைக்** (03) கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

12.

i. நெம்புகோல் என்றால் என்னவென்பதை உதாரணம் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. சக்தியானது நெம்புகோலினூடாக எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றது என்பதை ஆரம்ப வகுப்பு மாணவருக்கு விளக்குவதற்கு பொருத்தமான கற்றல் அனுபவமொன்றை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

iii. 'பச்சைத் தாவரங்கள் தயாரிக்கும் சக்தியையே அனைத்து விலங்குகளும் பெறுகின்றன.' இக்கூற்றினை உதாரணம் தந்து விளக்குக.

(06 புள்ளிகள்)

13.

i. விஞ்ஞான முறையின் பிரதான படிகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. ஆரம்ப வகுப்பு மாணவருக்கு ' விஞ்ஞான ரீதியாக எவ்வாறு பிரச்சினைகளை தீர்க்கலாமென' அறிமுகம் செய்வதற்கு பொருத்தமான செயற்பாடொன்றினைத் திட்டமிடுக.
(கற்றல் செயற்பாட்டின் ஒவ்வொரு படிமுறைகளையும் விளக்குக.)

(08 புள்ளிகள்)

iii. வகுப்பறையில் விஞ்ஞான முறைகளை பயிற்சி செய்வதன் மூலம் பிள்ளைகளிடம் விருத்திசெய்யக்கூடிய விஞ்ஞானத் திறன்கள் பற்றிக் கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது